**ஓமம் செரிமானத்துக்கு மட்டுமல்ல, செழிப்புக்கும்! மானாவரிக்கேற்ற மகத்தான பயிர்**



கடலூர் மாவட்டம், சிறுபாகம் கிராமத்தைச் சேர்ந்த மணிகண்டன் மானாவாரியில் மூலிகைப் பயிரான ஓமம் சாகுபடி செய்து வருகிறார்.கல்லூரிப் படிப்பு முடித்ததும், எண்ணெய் மில்லுல வேலைக்குச் சேர்ந்தேன். அது சம்பந்தமா ஆந்திரா பக்கம் போன போது ஓமம் சாகுபடி செய்வதைப் பார்த்தேன். பனிப்பொழிவைப் பயன்படுத்தியே மானாவாரியாக ஓமம் சாகுபடி பண்ணியிருந்தாங்க. இப்படி பல மாதிரியானப் பயிர்களைப் பார்த்திருந்தாலும், இந்த ஓமம் மட்டும் என் கண்ணுக்குள்ளயே நின்னுச்சு. கொஞ்ச வருடம் கழித்து, நான் பார்த்துக்கிட்டிருந்த வேலை சரிப்பட்டு வராததால, அதை விட்டுட்டு விவசாயம் பண்றதுக்கு வந்துட்டேன். எங்களுக்கு 15 ஏக்கர் நிலம் இருக்குது. பத்து ஏக்கருல மானாவாரி விவசாயம்தான். மழையைப் பொறுத்து மக்காச் சோளம், பருத்தி, கொத்தமல்லி, எள்ளுனு மாத்தி மாத்தி சாகுபடி செய்வேன். மீதி அஞ்சு ஏக்கருக்கு ஏரிப்பாசனம். அதனால, அதுல நெல் போடுவேன். போன சீசன்ல கொத்தமல்லிக்கு சரியான விலை கிடைக்கல, ஆந்திராவுல நான் பார்த்துட்டு வந்த ஓமம் நினைவுக்கு வந்தது. கொத்தமல்லி போட்டிருந்த இரண்டரை ஏக்கருல ஓமம் விதைத்தேன் என்று கூறிகிறார்.

**சாகுபடி முறை**

ஓமம், 120 நாள் வயது கொண்ட பயிர். பெரும்பாலும் மானவாரியில்தான் சாகுபடி செய்வார்கள். களிமண்ணில் நன்கு வளரும். ஐப்பசி, கார்த்திகைப் பட்டம் ஏற்றது. இம்மாதங்களில் மழைக்குப் பிறகு விதைக்க வேண்டும். விதைப்புக்கு முன் ஏக்கருக்கு மூன்று டிப்பர் என்ற கணக்கில் எருவைக் கொட்டிக் கலைத்து, சட்டிக் கலப்பை மூலம் ஓர் உழவும், கொக்கிக் கலப்பை மூலம் குறுக்கு “நெடுக்காக இரண்டு உழவும் ஓட்ட வேண்டும். பிறகு, 2 கிலோ ஓம விதைகளை, 2 கிலோ மணலுடன் கலந்து ஒரு அடி இடைவெளியில் விழுவது போல பரவலாக விதைத்து ஒரு சால் கொக்கிக் கலப்பை கொண்டு மண்ணைப் புரட்டிவிட வேண்டும்.விதைத்த 9 –ம் நாள் முளைத்து வரும்.20-ம் நாளில் ஒரு களை எடுக்க வேண்டும். ஓமத்தில் காரத்தன்மை இருப்பதால் பூச்சி, நோய் தாக்குவதில்லை. அதனால் பூச்சிக்கொல்லிகள் எதுவும் தேவையே இல்லை.

அதேபோல எந்த உரமும் கொடுக்க வேண்டிய அவசியமும் இல்லை. மழைகூட தேவையில்லை. ஓமத்தைப் பொருத்த வரை விதைக்கும் போது மட்டும், ஈரம் இருந்தால் போதும். முளைத்த பின் பனிக்காற்றில் இருக்கும் ஈரப்பதத்தை பயன்படுத்தியே வளர்ந்து விடும். இதைக் கால்நடைகள் சாப்பிடுவதில்லை, அதனால் பாதுகாப்பதும் எளிது. 60-ம் நாளில் பூவெடுக்கும். 120-ம் நாளில் அறுவடைக்குத் தயாராகி விடும். அறுவடை முடிந்த உடன் விதைகளை வட்டமாகப் பரப்பி மாடு அல்லது டிராக்கடர் மூலமாக தாம்பு அடித்து, விதைகளைத் தனியாகப் பிரித்து விடலாம். ஒரு ஏக்கரில் 150 முதல் 200 கிலோ வரை விதைகள் கிடைக்கும்.

**அறுவடை**

ஏக்கருக்கு 170 கிலோ மகசூல் கிடைத்தது. கிலோ நூறு ரூபாய்க்கு விற்பனையாகியது. சீசன்ல இருநூறு ரூபா வரைக்கும்கூட விலைபோகும். அதாவது, நவம்பர் மாசத்துல இதுக்கு நல்ல கிராக்கி இருக்கும். கொத்தமல்லி விளையறதுக்கேத்த எல்லா நிலத்துலயும் ஓமம் நல்லா வளரும்.இதுக்கு உலக அளவுல தேவை இருப்பதால் விற்பனைக்குப் பிரச்சனை இல்லை. எப்பொழுது வேண்டுமானாலும், விற்பனை செய்ய முடியும். சேலம் பகுதியில் ஓமத்தை வாங்குகிற நிறைய வியாபாரிகள் இருக்கிறார்கள். அரசு ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் மூலமாகவும் விற்பனை செய்யலாம்.